[22nd April 1959

(c) whether any representations regarding the same have been received by the Government from the Bar Association in the mufassal?

THE HON. SRI M. A. MANICKAVELU : (a) No, Sir.

(b) Does not arise.

(c) A representation has been received from the Bar Association, Kumbakonam, in the matter and it is under the consideration of the Government.

Baby Taxis

* 84 Q.—SRI A. A. RASHEED AND SRI A. VEDARATHNAM : Will the Hon. the Minister for Electricity be pleased to state whether there is any proposal to increase the number of baby taxis in the Madras City?

THE HON. SRI V. RAMAIAH : The total number of taxi permits fixed for the Madras City is 1,000. Of this, 990 permits have been sanctioned so far. Permits have been actually issued to 766 baby taxis and 111 big taxis. The remaining 113 permits for baby taxis will be issued on production of vehicles. There is no proposal to increase the total number.

SRI A. VEDARATHNAM : பேபி டாக்ஸியில் 3 பேர்கள்தான் சவாரி செய்யலாம் என்று நிர்ணயிக்கப்பட்டிருப்பதை மாற்றி நான்கு பேர்கள் சவாரி செய்யலாம் என்று உத்தரவு போடுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறதா ?

THE HON. SRI V. RAMAIAH : இப்போது நான்கு பேர்கள் சவாரி செய்யலாம் என்று உத்தரவு போடுவதற்கு முடிவு செய்திருக்கிறோம்.

Starting of Industrial Schemes in Development Block areas

* 85 Q.—SRI P. G. MANICKAM : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) எந்தெந்த சமுதாய நலத் திட்ட தேசீய விஸ்தரிப்புத் திட்டப் பகுதிகளிலே என்னென்ன தொழில் அபிவிருத்தி திட்டங்கள் 1958-ம் வருஷம் வரைக்கும் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன ?

(ஆ) இப்பகுதிகளிலே இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்குள்ளாக என்னென்ன தொழில் திட்டங்கள் ஆரம்பிக்கப்படும் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) & (b) A statement [a] showing the names of the blocks and the nature of the Industrial Schemes sanctioned and implemented in them till 1958 and also the industries proposed to be started in the blocks during 1959 is placed on the table of the House.

---

a Printed as Appendix IV on pages 232—235 infra.

22nd April 1959]

Sri P. G. MANICKAM : ஸார், நடப்பு வருஷத்தில் ஆறு வேலைகள் ஆரம்பிக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவைகள் எந்தெந்த இடங்களில் ஆரம்பிக்கப்படும் ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : அதைப்பற்றி சரியான தகவல் இப்போது என்னிடமில்லை. இவைகளில் இரண்டு, மதுரையில் ஆர்ட் மெட்டல் இண்டஸ்ட்ரீ ட்ரெயினிங் ஸென்டர் ஒன்று ஆரம்பிக்கப்படும், புலிக்கட்டில் "பாம் லீப் ப்ராடக்ட்ஸ் ட்ரெயினிங் ஸென்டர்" ஒன்று ஆரம்பிக்கப்படும்.

Latrine Facilities for Taluk Offices

* 86 *Q.*—**Sri V. K. KOTHANDARAMAN :** கனம் ரெவினியு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) எத்தனை தாலூகா ஆபீஸ்களில் கக்கூஸ் வசதி இல்லாமல் இருக்கிறது ?

(ஆ) எப்பொழுது அங்கு கக்கூஸ் கட்டப்படும் ?

The Hon. Sri M. A. MANICKAVELU : (*a*) Twenty-eight, Sir.

(*b*) Out of the 28 Taluk Offices mentioned against clause (*a*), proposals for constructing latrines in 17 cases are under examination by Collectors. In the remaining eleven cases, the Collectors are being asked to examine the question.

Sri V. K. KOTHANDARAMAN : தினந்தோறும் நூற்றுக்கணக்கான, 1-30
ஆயிரக்கணக்கான பேர்கள் வருகின்ற தாலுக்கா ஆபீஸ்களில் ஒன்னுக்கு, p.m.
இரண்டுக்கு போகக்கூட வசதி இல்லாத காரணத்தினால் உடனுக்குடன் சுகாதார வசதியோடு கூடிய கக்கூஸ்களைக் கட்டிக் கொடுப்பதற்கு சர்க்கார் முயற்சி செய்வார்களா ?

The Hon. Sri M. A. MANICKAVELU : இது எல்லாம் மொபசல் ஏரியாவில் இருக்கிறது. கக்கூஸ்கள் இருந்தால்கூட அவர்கள் உபயோகப்படுத்துவது இல்லை. அங்கே இங்கே போய் வந்துவிடுகிறார்கள்.

Sri M. K. SOMASUNDARAM : அங்கே இருக்கக்கூடிய கக்கூஸ்களைச் சுத்தமாக வைத்துக்கொள்ளாததன் காரணமாக அதை உபயோகிக்க முடியாத நிலைமையை மாற்றி—சுகாதார முறைப்படி செப்டிக் கக்கூஸ்களை ஏற்படுத்துவார்களா ?

The Hon. Sri M. A. MANICKAVELU : சுகாதார முறைப்படிதான் வைக்கவேண்டும். செப்டிக் கக்கூஸ் வைக்கலாம். சில இடத்தில் அதுகூட இல்லை. அதையும் கவனிக்கவேண்டும்.

Sri A. VEDARATHNAM : கனம் அமைச்சர் அவர்கள் இருக்கின்ற கக்கூஸ்களை, உபயோகப்படுத்துவது இல்லை என்றார்கள். இருக்கிற கக்கூஸ்களில் தலை நீட்டக்கூட முடிவதாக இல்லை. ஆகவே அவற்றை உபயோகிக்க லாயக்குள்ளதாகச் செய்ய முன்வருவார்களா ?

The Hon. Sri M. A. MANICKAVELU : அந்த நிலைமை உண்டாக வேண்டுமானால் மக்களுடைய மனோபாவம், பழக்கவழக்கம் எல்லாம் மாறவேண்டும்.